2003 ஏப்ரல் 10]

230—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

•20647—திரு. எம். சுப்பையா பாண்டியன்:

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் பகுதி கிராமங்களில் மகளிருக்கென பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் பகுதி கிராமங்களில் மகளிர் சங்கங்கள் அமைக்கக் கேட்டுச் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

திரு. எம். சுப்பையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் சராசரியாக நாளொன்றுக்கு 55 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தியாகி வருகிறது. விழிகளைக் காக்க இமைகள் துணையாகும். விடியல் வந்திட இரவுகள் மறைந்தோடும். வள்ளல்கள் பெருகிட வறுமை வழிந்தோடும். வான்மழை நிறைந்துவர பசுமைகள் செழித்தோங்கும். உண்மைகள் பேசிட உயர்வுகள் வந்திடும். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், பெண்கள் வாழ்வில் வளம் பெற சுய உதவிக் குழு அமைத்து சிறப்பாக செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் பகுதி கிராமங்களில் சுய உதவிக் குழுக்கள் மூலமாக மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அதிகமாக தொடங்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிருக்கென பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க கோரிக்கை பெறப்பட்டால் தகுதி அடிப்படையில் சங்கம் அமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.